ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

ஸ்ரீமதே நிக₃மாந்தமஹாதே₃ஶிகாய நம:

ஸ்ரீமந்நிகமாந்தமஹாதேஶிகன் அருளிய

பரமபதசோபானம்

This document has been prepared by

Sunder Kidāmbi

with the blessings of

ஸ்ரீ ரங்க₃ராமாநுஜ மஹாதே₃ஶிகன்

His Holiness śrīmad āṇḍavan śrīraṅgam

ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

ஸ்ரீமதே நிக3மாந்தமஹாதே3ஶிகாய நம:

பரமபதசோபானம்

சீரொன்று தூப்புல் திருவேங்கடமுடையான்
பாரொன்ற ச்சொன்ன பழமொழியுள் - ஓரொன்று
தானே அமையாதோ தாரணியில் வாழ்வார்க்கு
வானேற ப்போமளவும் வாழ்வு

வ்யாஜீக்ரு’த்ய விமுக்தி ஸௌத4பத3வீ
ஸோபாந ஸத்3வர்ணநம்
ஶாரீரார்ணவ ரத்நஜாதமிஹ ய:
ப்ராசீகஶத்ஸர்வஶ: ।
தஸ்மிம்ஸ்திஷ்ட2தி வேங்கடேஶ்வரகவெள
ஸ்ரீபா4ஷ்யகாரோபமே
யம் கஞ்சித் புருஷம் ஹ்யுபாஸிதுமயே
மாகா3 மந: ஸ்வஸ்தி தே ॥

தஸ்மை நமோऽஸ்து கு3ரவே தாத்3ரு’” -
ஸவிப4வாய வேங்கடேஶாய ।
ப்ராவர்தயஜ்ஜநாநாம் பூ4மௌ
பரமபத3ஹர்ம்யஸோபாநம் ॥

தேன் ஏறு தாமரையாள் திருமார்பன் தன் ⋆
திண் அருளால் அவன் அடியில் விவேகம் பெற்றிங்கு ⋆
ஊன் ஏறு பவக் குழியை வெறுத்ததற்பின் ⋆
ஊர் விரத்தி உடன் வினையின் திரளுக்கஞ்சிக் ⋆
கூன் ஏறு பிறை இறையோன் சாபம் தீர்த்தான் ⋆

குரை கழலே சரண் அடைந்து குரம்பை விட்டு ⋆
வான் ஏறும் வழிப் படிகள் அடைவே கண்ட ⋆
வண் புகழ்த் தூப்புல் வள்ளல் அருள் பெற்றோமே

‡ அடல் புள் அரசினும் ⋆
அந்தணர் மாட்டினும் ⋆
இன்னமுதக் கடற் பள்ளி தன்னினும் ⋆
காவிரி உள்ளம் உகந்த பிரான் ⋆⋆
இடைப் பிள்ளை ஆகி உரைத்ததுரைக்கும் ⋆
எதிவரனார் ⋆
மடைப் பள்ளி வந்த மணம் ⋆
எங்கள் வார்த்தையுள் மன்னியதே ॥ **1** ॥

கள்ள மனத்துடன் ⋆
கண்டு முயன்ற கடு வினையால் ⋆
நள் இருள் ஆழியில் ⋆
நற்சுவை ஐந்தென நாடிய ஓர் ⋆⋆
அள்ளலில் நாளும் ⋆
விழுந்தழியாவகை ஆரணநூல் ⋆
வள்ளல் வழங்கிய ⋆
வான் படியான வழி இதுவே ॥ **2** ॥

அரு உரு ஆனவை அனைத்தும் அறிவார் ஏனும் ⋆
அருங்கலைகள் கற்றுரைக்க வல்லார் ஏனும் ⋆
தரும வழி அழியாமல் காப்பார் ஏனும் ⋆
தனி மறையின் தாற்பரியம் தருவார் ஏனும் ⋆⋆
இரு வினையின் ஒழுக்கத்தால் ஏவல் ஓராது ⋆
இங்கே நாம் சிறை இருந்த ஈனம் தீர்க்கும் ⋆

திருமகளார் பிரியாத தேவன் திண்ணம் ⋆
தேறாதார் திண் படியில் ஏறாதாரே ॥ **3** ॥

மறுத் தார் திருவுடன் ⋆
மார்பில் தரித்தவன் வாசகத்தை ⋆
மறுத்தார் மயக்கமும் ⋆
மற்றதனால் வந்த மா நரகும் ⋆⋆
நிறுத்தார் பவத்தில் ⋆
நெடு நாள் உழன்றமை கண்டதனால் ⋆
வெறுத்தாரண நெறியே ⋆
வெள்கி ஓட விரைவர்களே ॥ **4** ॥

வான் பட்ட மன் இருளில் மயங்குமாறும் ⋆
மறித்தொரு கால் எனை ஊழி சென்றால் அன்றோர் ⋆
ஊன் பட்ட உடல் ஆழி வினை ஒழுக்கில் ⋆
ஒரு கரையும் காணாதே ஒழுகு மாறும் ⋆⋆
தேன் பட்ட விடம் போலத் தித்திக்கின்ற ⋆
சிறு பயனே உறு பயன் என்றருந்துமாறும் ⋆
தான் பட்ட படி இந்நேர் தானே கண்டு ⋆
தளர்ந்திடுமேல் வளர்ந்திடுமே தக்கவாறே ॥ **5** ॥

உலகத்துயர்ந்தவர் ⋆
ஒன்றும் பயனில் உறும் துயரும் ⋆
அலகில் படாத ⋆
அப்போகம் கவர்ந்தெழும் அம்புயத்தோன் ⋆⋆
கலகத் தொழில் மது கைடபரால் ⋆
படும் கட்டம் எண்ணில் ⋆

பல கற்ற மெய் அடியார் ⋆
படியார் இக்கடும் பவத்தே ॥ **6** ॥

தந்திரங்கள் அளவிலராய்த் தனத்தால் மிக்க ⋆
தார் வேந்தர் தொழ வையம் ஆண்டார் மாண்டார் ⋆
சந்திரனும் சூரியனும் வீயும் காலம் ⋆
தாரகையின் வடமும் அற்றுத் தனி வான் ஆளும் ⋆⋆
இந்திரனும் ஏறுயர்த்த ஈசன் தானும் ⋆
ஈர் இரண்டு முகத்தானும் இல்லா அந்நாள் ⋆
நம் திருமால் நிலை கண்டார் நாகம் எல்லாம் ⋆
நரகென்று நற்பதமே நாடு வாரே ॥ **7** ॥

துறவறமே துணிவார் ⋆
துணுக்கற்ற இளம் துணிவோர் ⋆
உறவிலர் ஆதலின் ⋆
நாம் உயர்ந்தார் உடன் ஒன்றி நின்றோம் ⋆⋆
மற வழி மாற்றி ⋆
எம் மையலைத் தீர்த்தவர் மன் அருளால் ⋆
கறவை உகந்த பிரான் ⋆
கழல் சூடும் கருத்தினமே ॥ **8** ॥

வந்தன போல் வருவனவும் அனந்தம் ஆகி ⋆
மாளாத துயர் தரு வல்வினை நெருப்புக்கு ⋆
இந்தனமாய் எண்ணிறந்த காலம் எல்லாம் ⋆
இன்னமும் இப்பவக் குழிக்கே இழியா வண்ணம் ⋆⋆
வெந்ததொரு குழவியை நற்குமரன் ஆக்கும் ⋆
வெறித் துளவ வித்தகனார் விதியே கொண்டார் ⋆

பந்தனமாம் அவை அனைத்தும் பாறுகைக்குப் ⋆
பழ மறையின் பரம நெறி பயிலுவாரே ॥ **9** ॥

கரு மாலையில் வரும் ⋆
கட்டம் கழிக்கும் கருத்துடையார் ⋆
ஒரு மால் பெருகும் ⋆
உயோகில் முயன்றும் அதன்றியும் நம் ⋆⋆
திரு மால் அடி இணை ⋆
திண் சரணாகும் என வரித்தும் ⋆
தரு மால் இனி அவை தானே எனத் ⋆
தகவெண்ணுவரே ॥ **10** ॥

முன் செய்த வினைத் திரளில் முளைத்ததன்றி ⋆
முற்றுள்ள முதல் அரிந்து முளைத்த கூற்றில் ⋆
தன் செய்ய திரு அருளால் இசைவு பார்த்துத் ⋆
தழல் சேர்ந்த தூலம் எனத் தானே தீர்த்துப் ⋆⋆
பின் செய்த வினையில் நினைவொன்றாதொன்றும் ⋆
பிழை பொறுத்து வேறுளது விரகால் மாற்றும் ⋆
என் செய்ய தாமரைக் கண் பெருமான் எண்ணம் ⋆
எண்ணாதார் எட்டிரண்டும் எண்ணாதாரே ॥ **11** ॥

உறை இட்ட வாள் என ⋆
ஊனுள் உறையும் யோகியரை ⋆
நறை மட்டொழிவற்ற ⋆
நற்றுளவேந்திய நாயகன் தான் ⋆⋆
நிறை மட்டிலாத ⋆
நெடும் பயன் காட்ட நினைந்து ⋆

உடலச் சிறை வெட்டி விட்டு ⋆
வழிப் படுத்தும் வகை செய்திடுமே ॥ **12** ॥

முன் கருவி ஈர் ஐந்தும் மனத்தில் கூட்டி ⋆
முக்கியமாம் மருத்தில் அவை சேர்த்ததெல்லாம் ⋆
நன்குணரும் உயிரினில் சேர்த்தைம் பூதத்தை ⋆
நண்ணுவித்துத் தான் தன் பால் வைக்கும் நாதன் ⋆⋆
ஒன்பதுடன் வாசல் இரண்டுடைத்தாய் உள்ளே ⋆
ஒரு கோடி துயர் விளைக்கும் உடம்பாய் ஒன்றும் ⋆
வன் சிறையின் தலை வாசல் திறந்து ⋆
நம்மை வான் ஏற வழிப் படுத்த மனம் உற்றானே ॥ **13** ॥

தெருள் ஆர் பிரம புரத்திறை சேர்ந்து ⋆
இடர் தீர்ந்தவர் தாம் ⋆
மருள் ஆர் பிரம புரச் சிறை தீர்ந்த பின் ⋆
வந்தெதிர் கொண்டு ⋆⋆
அருளால் அமரர் நடத்த ⋆
இம்மாயை கடந்த தற்பின் ⋆
சுருளார் பவ நரகச் சுழல் ⋆
ஆற்றின் சுழற்சியிலே ॥ **14** ॥

விழி அல்லால் வேல் இல்லை விண்ணின் மாதர் ⋆
மேனி அல்லால் வில் இல்லை மீனவற்கு ⋆
மொழி அல்லால் அமுதில்லை என்று முன்னாள் ⋆
முத்தி வழி முனிந்தடைந்த மோகம் தீர்ந்தோம் ⋆⋆
கழி அல்லால் கடல் இல்லை என்பார் போலக் ⋆
காரியமே காரணம் என்றுரைப்பார் காட்டும் ⋆

வழி அல்லா வழி எல்லாம் கடந்தோம் ⋆
மற்றும் வான் ஏறும் வழி கண்டோம் மகிழ்ந்திட்டோமே ॥ **15** ॥

வன் பற்றுடன் மயல் பூண்டு ⋆
மற்றோர் கதியால் இன நாள் ⋆
என் பெற்றது பெறும் தானமும் ⋆
எத்தனை போதுளதாம் ⋆⋆
துன்பற்ற தன் துணிவால் ⋆
துயர் தீர்க்கும் துழாய் முடியான் ⋆
இன்புற்ற நல் வழியால் ⋆
ஏற்று நற்பதம் எண்ணுவமே ॥ **16** ॥

பண்டை இரு வினை ஆற்றில் படிந்து ⋆
பாரம் காணாதே ஒழுகிய நாம் பாக்கியத்தால் ⋆
வண்டமரும் மலர் மாதர் மின்னாய் மன்ன ⋆
வைசயந்தி மணி வில்லாய் விளங்க வான் சேர் ⋆⋆
கொண்டல் அருள் மழை பொழிய வந்ததொப்பாம் ⋆
குளிர்ந்து தெளிந்தமுதாய விரசை ஆற்றைக் ⋆
கண்டணுகிக் கருத்தாலே கடந்து ⋆
மீளாக் கரை கண்டோர் கதி எல்லாம் கதித்திட்டோமே ॥ **17** ॥

பூ வளரும் திரு மாது புணர்ந்த ⋆
நம் புண்ணியனார் ⋆
தாவளமான தனித் திவம் சேர்ந்து ⋆
தமர் உடனே ⋆⋆
நா வளரும் பெரு நான் மறை ⋆
ஓதிய கீதம் எல்லாம் ⋆

பா வளரும் தமிழ்ப் ⋆
பல்லாண்டிசை உடன் பாடுவமே ॥ **18** ॥

அடல் உரகம் உண்டுமிழ்ந்த அருக்கன் போல ⋆
அழுக்கடைந்து கழுவிய நல் தரளம் போலக் ⋆
கடல் ஒழுகிக் கரை சேர்ந்த கலமே போலக் ⋆
காட்டுத் தீக்கலந்தொழிந்த களிறே போல ⋆⋆
மடல் கவரும் மயல் கழிந்த மாதர் போல ⋆
வன் சிறை போய் மன்னர் பதம் பெற்றார் போல ⋆
உடன் முதலா உயிர் மறைக்கும் மாயை நீங்கி ⋆
உயர்ந்த பதம் ஏறி உணர்ந்தொன்றினோமே ॥ **19** ॥

‡ மண் உலகில் மயல் தீர்ந்து மனம் ததும்பி ⋆
மன்னாத பயன் இகந்து மாலே அன்றிக் ⋆
கண் இலதென்றஞ்சி அவன் கழலே பூண்டு ⋆
கடும் சிறை போய்க் கரை ஏறும் கதியே சென்று ⋆⋆
விண் உலகில் வியப்பெல்லாம் விளங்கக் கண்டு ⋆
விண்ணவர் தம் குழாங்கள் உடன் வேதம் பாடிப் ⋆
பண் உலகில் படியாத இசையால் பாடும் ⋆
பல்லாண்டே பல்லாண்டும் பாடுவோமே ॥ **20** ॥

‡ மாளாத வினை அனைத்தும் மாள நாம் போய் ⋆
வான் ஏறி மலர் மகளார் அன்பு பூணும் ⋆
தோளாத மா மணிக்குத் தொண்டு பூண்டு ⋆
தொழுதுகந்து தோத்திரங்கள் பாடி ஆடிக் ⋆⋆
கேளாத பழ மறையின் கீதம் கேட்டுக் ⋆
கிடையாத பேர் இன்பம் பெருக ⋆

நாளும் மீளாத பேர் அடிமைக்கன்பு பெற்றோம் ⋆
மேதினியில் இருக்கின்றோம் விதியினாலே ॥ **21** ॥

அடிவரவு — அடற்புள் கள்ள அரூரு மறு வான் உலகு தந்திரங்கள் துறவறமே வந்தன கருமாலை முன்செய்த உறை முன்கருவி தெருளார் விழி வன் பண்டை பூவளரும் அடல் மண்ணு மாளாத எண்தள

பரமபதசோபானம் முற்றிற்று

சீரார் தூப்புல் திருவேங்கடமுடையான் திருவடிகளே சரணம்